குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.9/2024

எ.ம.சா. 1

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் தேதி செவ்வாய் கிழமை எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி 01-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது..

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவி | தொழில் | |
| தந்தை பெயர் | மணி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.21 மணி,

Complainant Saravanan present. Advocate Mr.Sanchu kumar present for Complainant. Accused Prabakaran present. Mr. Geminishankar present for Accused.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நான் முத்துநாயக்கன்பட்டியில் குடியிருக்கிறேன். நான் கட்டிட மேஸ்திரியாக இருக்கிறேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிரி பிரபாகரன் அழைத்ததின் பேரில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி எதிரி பிரபாகரன் மதுரையை சேர்ந்தவர். புகார்தாரர் சரவணன் முத்துநாயக்கன்பட்டியை சேர்ந்தவர். எதிரியை எனக்கு கடந்த 15 வருடங்களாக எனது ஊரில் மெடிக்கல் வைத்திருந்ததின் பேரில் தெரியும். புகார்தாரர் சரவணன் நகை கடை வைத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரரின் தம்பி ராஜு என்பவர் வைத்துள்ளார்.

2) எனது பிரமாண வாக்குமூலத்தில் புகார்தாரர் சீட்டு நடத்தி வந்தார் என்று நான் சொல்லியுள்ள நிலையில் நான் சீட்டு போட்டு இருந்தேனா என்றால் இல்லை. எதிரி புகார்தாரரிடம் எந்த வருடம் சீட்டு போட்டார் என்றால் வருடம் சரியாக தெரியவில்லை. மேற்படி சீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் மற்றும் எந்த தேதியில் ஏலம் விடுவார் என்ற விபரம் எனக்கு தெரியாது. புகார்தாரர் எதிரியின் மீது எவ்வளவு தொகைக்கான காசோலை மோசடிக்கான வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியாது. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள வழக்கு காசோலை எதிரி கொடுத்தது தான், மேற்படி காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பம் ஆகும்.

3) புகார்தாரரிடம் ரூ.1,20,000/- ம் பணம் கொடுத்ததாக எனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ரசீது ஏதும் பெற்றுக் கொள்ளவில்லை. பணத்தை திருப்பி கொடுத்துவிட்டு காசோலையை திருப்பி வாங்கவில்லை. புகார்தாரர் சீட்டு நடத்திவருகிறார் என்பது பொய் என்றால் சரியல்ல தற்போதும் சீட்டு நடத்தி வருகிறார். இவ்வழக்கு காசோலை சீட்டுக்காக கொடுக்கப்பட்டது இல்லை என்றாலும் புகார்தாரரிடம் எதிரி வாங்கிய கடனுக்காக கொடுக்கப்பட்ட காசோலை என்றாலும்

சரியல்ல. எதிரி சீட்டு போட்டார் என்று நான் சொல்லியுள்ள நிலையில் எத்தனை நபர்கள் சீட்டு போட்டார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியவில்லை என்பதால் அவ்வாறு சீட்டு ஏதும் போடவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் சீட்டு நடத்தியதற்கு எதிரி தரப்பில் எந்த ஆவணமும் சமர்ப்பிக்கவில்லை என்றால் தெரியவில்லை.

4) எதிரி ரூ.1,20,000/- புகார்தாரருக்கு கொடுத்ததாக சொல்வது பொய் என்றாலும் அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் நிரஞ்சன்பிரபுவிற்கும் எதிரிக்கும் பிரச்சனை இருந்ததாக சொல்லியுள்ளேன் அதற்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை. சீட்டுக்காக கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொல்வது பொய் என்றாலும் அதை பற்றி எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. எதிரி வைத்திருந்த மெடிக்கலை விரிவு படுத்த வேண்டி புகார்தாரர் கடன் கொடுத்து இருந்தார் என்றால் சரியல்ல. புகார்தாரரின் வளர்ச்சியை விரும்பாத அவருடைய ஊரைச்சேர்ந்த நான் அவருக்கு எதிராக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.35 மணி.

Sd/.S.Sadhamhusain,<br>Judicial Magistrate,<br>Fast Track Court,<br>Omalur.